## சென்னை தினமலர் நாளிதழில் "பெருமாளே" என்ற தலைப்பில் 24.04.2015 அன்று வெளிவந்துள்ள உண்மைக்கு மாறான செய்திக்கு மாண்புமிகு உணவு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.இரா.காமராஜ் அவர்களின் மறுப்புச்செய்தி

-------------------------------

மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்ற பின், இந்து சமய அறநிலையத்துறையில் திருக்கோயில் திருப்பணிகளுக்கு முன்னுரிமை அளித்து குடமுழுக்கு நடத்தப்பட்டு வருகிறது. இதில் 2011–12 ஆம் ஆண்டு 1006 திருக்கோயில்களுக்கு திருப்பணி முடித்து குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது. 2012–13ஆம் ஆண்டில் 1906 திருக்கோயில்களுக்கும், 2013–14ஆம் ஆண்டில் 2439 திருக்கோயில்களுக்கும் திருப்பணி முடித்து குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது.

பொதுவாக, திருக்கோயில்களில் ஆகம விதிகளின்படி 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை குடமுழுக்கு நடத்தப்பெற வேண்டும். திருக்கோயில்களைப் பொறுத்தமட்டிலும் அவற்றில் மேற்கொள்ள வேண்டிய புனரமைப்புப் பணிகள், சம்பிரதாயப்படி நடைபெறும் திருவிழாக்கள் இவற்றைப் பொறுத்து குடமுழுக்கு தேதி நிர்ணயம் செய்யப்படுகிறது. முதலில் விமானங்கள் மற்றும் புனரமைக்க வேண்டிய சன்னதிகள் பாலாலயம் செய்யப்படும். இறுதிக் கட்டமாகவே கருவறையிலும், மூலவர் விமானத்திலும் மேற்கொள்ள வேண்டிய புனரமைப்புப் பணிகளைப் பொறுத்து பாலாலயம் செய்யப்பட்டு புனரமைப்புப் பணிகள் முடித்து நிர்ணயிக்கப்பட்ட தேதியில் குடமுழுக்கு நடத்தப்படும்.

திருக்கோயில்களின் திருப்பணியைப் பிற கட்டுமான பராமரிப்பு பணிகளுடன் ஒப்பிட இயலாது. தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட புராதன சின்னங்களாகவும், ஆன்மீகத்தின் அடையாளங்களாகவும் விளங்கி வருகின்றன. எனவே, திருக்கோயில்களில் திருப்பணி மேற்கொள்ளும்போது அவற்றின் தொன்மை மாறாமல் புனரமைக்க வேண்டிய அவசியம் உள்ளது. அதேபோன்று ஆகம விதிகளுக்குட்பட்டுஅனைத்து நடைமுறைகளையும் பின்பற்ற வேண்டியிருக்கிறது.

தொல்லியல் வல்லுநர்கள், சிற்பக்கலையில் தேர்ந்த ஸ்தபதிகள், ஆகமம் கற்றறிந்த சான்றோர் ஆகியோர் பங்களிப்புடன் இப்பணி மேற்கொள்ளப்படுகிறது. எனவே தான் பெரிய திருக்கோயில்களில் குடமுழுக்கு செய்ய போதிய கால அவகாசம் தேவைப்படுகிறது.

தமிழ்நாட்டில் மிகப்பெரிய திருக்கோயில்களில் ஒன்றான இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயில் திருப்பணி **12.3.2014** அன்று தொடங்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இவை முழுமை பெற இன்னும் குறைந்த பட்சம் மூன்று மாத காலம் தேவைப்படுகிறது. அதே போல உலகப் பிரசித்தி பெற்ற ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் திருப்பணிகள் **29.6.2014** அன்று தொடங்கப்பெற்றது. இத்திருக்கோயில் பல பிரகாரங்களையும் சன்னதிகளையும் கொண்ட பெரிய கோயிலாக இருந்தபோதிலும் விரைந்து திருப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில் திருப்பணிகள் **26.1.2015** அன்று தான் தொடங்கப்பட்டுள்ளன. எனவே, இப்பணிகள் நிறைவு பெற இன்னும் குறைந்த பட்சம் எட்டு மாதங்களாவது தேவைப்படும். சுவாமிமலை திருக்கோயிலைப் பொறுத்தவரை, அத்திருக்கோயில் ஐதீக முறைப்படி ஐப்பசி மாதத்தில் குடமுழுக்கு நடத்துவது வழக்கம். அதற்குள்ளாக திருப்பணி வேலைகளை முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சென்னை திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் மூலவர் விமானம் மற்றும் தரை தளங்களிலும் திருப்பணி வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இத்திருப்பணிகள் நிறைவடைவதைப் பொறுத்து குடமுழுக்குக்கான தேதி நிர்ணயம் செய்யப்படும்.

இதை தவிர, **1.5.2015** அன்று சேலம் அஸ்தம்பட்டி அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், கீழ்வேளூர் அருள்மிகு அட்சயலிங்க சுவாமி திருக்கோயில், பேரளையூர் அருள்மிகு வரதராஜபெருமாள் திருக்கோயில், புதுக்கோட்டை அருள்மிகு சாந்தநாதசுவாமி குழுக்கோயில்கள் போன்ற பல திருக்கோயில்களில் குடமுழுக்கு நடைபெறவுள்ளது. ஸ்ரீவில்லிப்புத்தூர் அருள்மிகு வடபத்திரசாயி திருக்கோயில் மற்றும் பழனி திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு பெரிய

ஆவுடையார் என்னும் பிரகதீஸ்வரர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களைப் பொறுத்தமட்டிலும் திருப்பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளதால் 22.5.2015 குடமுழுக்கு செய்ய தேதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் பாடல்பெற்ற ஸ்தலமான கோனேரிராஜபுரம் அருள்மிகு உமாமகேஸ்வரி திருக்கோயிலில் 29.5.2015 அன்று குடமுழுக்கு நடைபெறவுள்ளது.

எந்தெந்த திருக்கோயில்களிலெல்லாம் திருப்பணி நடந்து வருகின்றதோ, அத்திருக்கோயில்களில் பணி முடிய முடிய, குடமுழுக்கு விழா செவ்வனே நடத்தப் பெறுகிறது. உண்மை இப்படியிருக்க திருப்பணிகள் முடிவுற்றும் குடமுழுக்கு விழாவை வேண்டுமென்றே தள்ளிப்போடுவதாக ‘‘தினமலர்’’ நாளிதழ் விமர்சிப்பது விஷமத்தனமானது. ஏற்கனவே திருப்பணிகள் முடிவடைந்ததால் திருவொற்றியூர் அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயிலில் 22.2.2015 அன்றும், திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலில் 25.3.2015 அன்றும் குடமுழுக்கு விழா சிறப்பாக நடைபெற்றது. பாடல்பெற்ற ஸ்தலமான திருமழப்பாடி அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயிலில் 8.2.2015 அன்று குடமுழுக்கு நடைபெற்றது. இதுபோன்று தொடர்ந்து திருக்கோயில்களில் குடமுழுக்கு தொடர்பான பணிகள் நடைபெற்று வருவதால் அன்றாடம் பத்திரிகைகளில் குடமுழுக்கு விழாச் செய்திகள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன.

கடந்த நிதியாண்டில் மட்டும் ஒரு மாதத்திற்கு குறைந்தது 100 திருக்கோயில்களில் குடமுழுக்கு என்ற வகையில் மொத்தம் 1976 திருக்கோயில்களில் குடமுழுக்கு நடைபெற்றிருக்கின்றது. இந்த ஜனவரி மாதத்தில் 126 திருக்கோயில்களிலும், பிப்ரவரி மாதத்தில் 220 திருக்கோயில்களிலும், மார்ச் மாதத்தில் 116 திருக்கோயில்களிலும் குடமுழுக்கு விமரிசையாக நடத்தப்பட்டுள்ளது. எதுவுமே நடக்க வில்லையென்று குறை சொல்பவர்கள் இதற்கு என்ன பதில் சொல்வார்கள் ?

இதற்கு முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு மாண்புமிகு மக்கள் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் கோயில் திருப்பணிகள் வரலாற்று சாதனை படைக்கும் அளவிற்கு

மேற்கொள்ளப்பட்டுள்ளது. பக்தர்கள் பசியாற அன்னதானத்திட்டத்தை தொடங்கிவைத்து, மிகச்சிறப்பாக **518** திருக்கோயில்களில் அன்னதானம் வழங்கப்படுவதும், அவற்றுள் ஸ்ரீரங்கத்திலும், பழனியிலும் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கப்படுவதும் மாண்புமிகு மக்கள் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் தான். சீனாவில் உள்ள மானசரோவர் மற்றும் நேபாளத்தில் உள்ள முக்திநாத் ஆகிய புனிதத்தலங்களுக்கு யாத்திரை சென்றுவரும் பக்தர்களுக்கு அரசு நிதியுதவி வழங்குவதும் மாண்புமிகு மக்கள் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தான். அதே போல் ஆக்கிரமிப்பில் இருந்த ரூ.**2,337.55** கோடி மதிப்பிலான திருக்கோயில்களுக்கு சொந்தமான நிலங்கள், மனைகள், கட்டிடங்கள் பெருமளவில் மீட்கப்பட்டது மாண்புமிகு மக்கள் முதல்வர் ஆட்சியில் தான்.

இந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் **137** திருத்தேர்கள் ரூ.**12.29** கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டு திருத்தேரோட்டங்கள் நடைபெற்றுள்ளன. அதே போன்று **606** திருக்குளங்கள் ரூ.**2.59** கோடி செலவில் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

திட்டங்களைத் தீட்டி அவற்றை விரைந்து செயல்படுத்திவரும் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களது ஆட்சியில் அனைத்து திருக்கோயில்களிலும், அந்தந்த திருக்கோயிலுக்கான அட்டவணைப்படியே திருப்பணிகளை நிறைவு செய்து, குடமுழுக்கு விழா நடத்தப்படுகிறது. எனவே இதில் காலதாமதம் என்று குறை சொல்லும் ஏப்ரல் **24** தேதியிட்ட தினமலர் நாளிதழின் கூற்று முழுவதும் ஆதாரமற்றது.

ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்று மக்கள் நம்பக்கூடிய பத்திரிகைகளுக்கு தார்மீக கடமை இருக்கிறது. ஆனால் காசு கொடுத்து பத்திரிகைகள் படிக்கக்கூடிய பொது மக்களுக்கு உண்மைச் செய்திக்கு பதிலாக உள் நோக்கத்திலான செய்திகளை, பல நேரங்களில் சிலரை திருப்திப்படுத்தும் நோக்கத்தோடு செய்தி வெளியிடுவது என்பது மிகப்பெரும் பாவ காரியமாகும்.

அச்சு எந்திரங்களை பொய்களை விதைக்கும் நச்சு எந்திரங்களாக மாற்றுகிற பாவ காரியத்தை தொடர்ந்து செய்து வருவதும், பரபரப்பு

கூட்டுகின்றோம் என்ற பெயரால் விஷமச் செய்திகளை வெளியிடுவதும், ஆளும் அரசுக்கு எதிராக அவதூறுகளை பரப்புவதும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் ஆட்சியை மிரட்டுவது போன்றதாகும். இத்தகைய கண்ணியமற்ற செயல்களை தொடர்ந்து செய்து வரும் தினமலர் நாளிதழ் அதனை கடவுள் வரை கொண்டு வந்திருக்கிறது.

இறையை போற்றுவதும், இறைக்கு அஞ்சுவதும், அனைத்து தரப்பு மக்களின் நம்பிக்கைக்கு மதிப்பளிப்பதும், தெய்வத்தன்மையிலான நல்லரசை மக்களுக்கு வழங்குவதுமென உறுதி கொண்ட மாண்புமிகு மக்கள் முதல்வர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடக்கின்ற கழக அரசின் மீது துளியும் உண்மையற்ற செய்திகளை வெளியிட்டிருப்பது தினமலர் நாளிதழின் செய்தியை படிக்கும் வாசகர்களுக்கு செய்கின்ற பச்சைத் துரோகம் மட்டுமின்றி பொது மக்களிடம் கழக அரசின் மீது தவறான கண்ணோட்டத்தை உருவாக்க முயற்சிக்கிற உள்நோக்கம் கொண்ட துஷ்டத்தனம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே இவ்விதம் மக்கள் மத்தியில் தவறான தகவல்களைத் திட்டமிட்டு வேண்டுமென்றே பரப்பும் தினமலர் நாளிதழ் மீது சட்டப்படி அவதூறு வழக்கு தொடரப்படும் என்பதை உறுதிப்பட தெரிவித்துக்கொள்கிறேன்.

(இரா.காமராஜ்)
உணவு, இந்து சமயம் மற்றும்
அறநிலையத்துறை அமைச்சர்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**